29.1.2008 -ம் நாளிட்ட தமிழ்நாடு
அரசிதழ் சிறப்பு வெளியீட்டில்
வெளியிடப்பட வேண்டியது

**சுருக்கம்**

**ஆட்சி எல்லை – தருமபுரி மாவட்டம்–தற்போதைய தருமபுரி கோட்டத்தை சீரமைத்து புதிய அரூர் கோட்டம் உருவாக்குதல்– ஆணை வெளியிடப்படுகிறது.**

வருவாய் (வ.நி1(1) துறை

அரசாணை (நிலை ) எண்.46 நாள்.29.01.2008

படிக்க:

1) அரசாணை (நிலை) எண். 569, வருவாய்த்துறை, நாள் 20.11.2003.
2) தருமபுரி மாவட்டாட்சியரின் நேர்முக கடிதம் 45847/2004 (A5) நாள். 30.3.2007.
3) சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் D. Dis கடிதம் எண். பணி.6(4)/52778/2006 நாள்.18.5.2007.

------

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தருமபுரி மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு புதிய கிருஷ்ணகிரி மாவட்டம் உருவாக்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டம் உருவாக்குவதற்கு முன்பு தருமபுரி மாவட்டம் 10 வட்டங்களையும், மூன்று கோட்டங்களையும் கொண்டிருந்தது. பிரிவினைக்குப் பின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இரண்டு கோட்டங்களும், ஐந்து வட்டங்களும், தருமபுரி மாவட்டத்தில் ஒரு கோட்டமும், ஐந்து வட்டங்களும் இடம் பெற்றுள்ளன. கிருஷ்ணகிரி கோட்டத்தில் இடம் பெற்றிருந்த பாலக்கோடு வட்டம் தருமபுரி கோட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே தருமபுரி கோட்டத்தில் பாலக்கோடு வட்டத்துடன் தற்போது ஐந்து வட்டங்களை கொண்டு, தருமபுரி மாவட்ட முழுவதற்கும் ஒரே கோட்டமாக தருமபுரி கோட்டம் உள்ளது.

2. தருமபுரி மாவட்டம், தற்போதைய தருமபுரி கோட்டத்தைச் சீரமைத்து அரூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய அரூர் கோட்டம் உருவாக்குவது குறித்த தருமபுரி மாவட்டாட்சியர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு கவனமுடன் பரிசீலித்து, நிர்ணயிக்கப்பட்ட அனைத்து அளவுகோள்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் தற்போதைய தருமபுரி கோட்டத்திலிருந்து அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய இரு வட்டங்களை முழுமையாகப் பிரித்து அதில் அடங்கும் குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களுடன் அரூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய அரூர் கோட்டத்தை உருவாக்கி அரசு ஆணையிடுகிறது. இப்புதிய கோட்டம் 13.02.2008 முதல் செயல்படும்.

3. சீரமைப்புக்குப் பின் தருமபுரி மற்றும் அரூர் கோட்டங்கள் பின்வருமாறு அமையும்.

| வ.எண். | கோட்டம் | வட்டம் |
|---|---|---|
| 1. | தருமபுரி | தருமபுரி<br>பென்னாகரம்<br>பாலக்கோடு |
| 2. | அரூர் | அரூர்<br>பாப்பிரெட்டிப்பட்டி |

4. இந்த ஆணையின் இணைப்பு–1 இல் கண்டுள்ள அறிவிக்கை 29.01.2008–ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்படும்.

5. புதிய அரூர் கோட்டத்திற்கு ஆணையின் இணைப்பு–2 இல் குறிப்பிட்டுள்ளவாறு 9 புதிய பணியிடங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. இப்பணியாளர்கள் தற்போதுள்ள ஆணைகளின்படி சம்பளம், அகவிலைப்படி மற்றும் இதரப்படிகளைப் பெறுவதற்கு தகுதியானவர்கள். மேலும் மேற்படி இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு 4 பணியிடங்கள் தருமபுரி கோட்டத்திலிருந்து அரூர் கோட்டத்திற்கு மறு பணி பரவலமர்த்தல் (Redeployment) மூலம் மாற்ற அரசு ஆணையிடுகிறது. அதன் பணியாளர்கள் உடனடியாக புதிய கோட்டத்தில் பணி ஏற்பர். அவர்களுடன் தளவாடம் மற்றும் இதர பொருட்களும் மாற்றப்பட வேண்டும்.

6. அரூர் கோட்டாட்சியருக்கு புதிய ஈப்பு (Jeep) வாங்க தொடரா செலவினமாக ரூ.5 லட்சத்திற்கும், மேற்படி வாகனத்திற்கு ஆகும் எரிபொருள் செலவிற்கு தொடரும் செலவினமாக ஆண்டொன்றிற்கு ரூ.50,000 அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

7. புதிய அரூர் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு தளவாடங்கள் (அறைகலன்கள்) வாங்க தொடராச் செலவினமாக ரூ. 2.5 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

8. புதிய அரூர் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு தேவைப்படும் எழுதுபொருட்கள் போன்றவற்றிற்க்கு எதிர்பாரா ஆரம்ப செலவினமாக (Start-up Expenditure) ரூ. 3,000க்கு ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும் தேவைப்படும் எழுதுபொருட்கள் இலவசமாக வழங்குமாறு எழுதுபொருட்கள் அச்சுத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இரண்டு தொலைபேசிகளுக்கு (ஒன்று கோட்டாட்சியரின் அலுவலகத்திற்கும் மற்றொன்று கோட்டாட்சியரின் இல்லத்திற்கும்) ஒப்புதல் வழங்கி அதற்கு ஆண்டொன்றிற்கு ஆகும் செலவு ரூ.18,000ற்கும் வைப்பு நிதியாக (Deposit) ரூ. 3,000ற்கும் ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

10. அரூர் கோட்டத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்படும் வரை பொதுப்பணித் துறை விதிகளின்படியும், அரசாணை (நிலை) எண். 329, நிதி (சம்பளம்) நாள். 30.8.2001–ல் வழங்கிய ஆணைப்படியும் வாடகை நிர்ணயம் செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

11. மேற்கூறிய செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்:–

(அ) 01 01 பணியாளர் சம்பளங்கள் ரூ. 11.80 இலட்சம்
" 2053 00 – மாவட்ட நிருவாகம் –094 ஏனைய பணியாளரமைப்பு – I - திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01. சம்பளங்கள் "
(து. தொ.கு. 2053 00 094 AB 0102)

(ஆ) 05 01 தொலைபேசி கட்டணங்கள் ரூ.3000/– தொடராச் செலவினம் ரூ.18,000/– தொடரும் செலவினம்
"05 அலுவலக செலவுகள் – 01 தொலைபேசிக் கட்டணங்கள்"
(து. தொ.கு. 2053 00 094 AB 0513)

(இ) 05 02 அலுவலகச் செலவுகள் ரூ.3,000/–
"05 அலுவலக செலவுகள் – 02. ஏனைய சில்லரைச் செலவுகள்"
(து. தொ.கு. 2053 00 094 AB 0522)

(ஈ) 05 05 அறைகலன்கள் ரூ. 2.5 இலட்சம்
" 05 அலுவலக செலவுகள் – 05 அறைகலன்"
(து. தொ.கு. 2053 00 094 AB 0559)

(உ) 21 01 மோட்டார் வண்டிகள் ரூ.5.00 இலட்சம்
" 21 மோட்டார் வண்டிகள்–01 வாங்குதல்"
(து. தொ. கு. 2053 00 094 AB 2119)

(ஊ) 45 00 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் ரூ.50,000/–
" 45 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்"
(த.தொ.கு.2053 00 094 AB 4500)

**12.** மேற்கண்ட செலவினங்களை பெற்று வழங்குவதற்கு, தருமபுரி மாவட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. கோட்ட அலுவலகத்திலிருந்து பெறப்படும் பணப் பட்டியல்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய சம்பந்தப்பட்ட சார் நிலை கருவூல அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்குமாறு தருமபுரி மாவட்ட கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் புது பணிகள் (New Service) குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்ப செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டிற்கு தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**13.** இந்த ஆணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண். 1/DS(RC) நிதி(வருவாய்)/2008, நாள். 12.1.2008 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண். 1669 ( ஆயிரத்து அறுநூற்று அறுபத்து ஒன்பது) இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அம்புஜ் சர்மா
அரசுச் செயலாளர்

பெறுநர்
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை –79 (**29.01.2008** நாளிட்ட சிறப்பு அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5.
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மை ஆணையர் மற்றும் நில சீர்திருத்த ஆணையர், சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை5.

ஆணையர் மற்றும் இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித் திட்டம், சென்னை–5.
ஆணையர், கருவூலத் துறை சென்னை–35.
மாவட்டாட்சியர், தருமபுரி மாவட்டம், தருமபுரி.
மாவட்ட கருவூல அலுவலர், தருமபுரி.
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–18 (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–18
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்துத் துறை தலைவர்கள்/ அனைத்து மாவட்டாட்சியர்கள்.
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.
பொது (தேர்தல்) துறை, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை –104
செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–9
செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–9.
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–35.
<u>நகல்:</u>
முதலமைச்சரின் செயலாளர், சென்னை –9.
வருவாய்த் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
வருவாய்த் துறை செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (வருவாய்/வ.செ.பொது–I/II) துறை, சென்னை–9.
வருவாய்த்துறை, (அனைத்து பிரிவுகள்) சென்னை–9. (தக்க தொடர் மேல் நடவடிக்கைக்காக)
இருப்பு கோப்பு/உதிரி.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்

## இணைப்பு–I

## அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள தருமபுரி கோட்டத்தை சீரமைத்து **2008–**ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் **13–**ஆம் நாளிலிருந்து அரூரை தலைமையிடமாகக் கொண்ட அரூர் கோட்டம் கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

**2.** புதிய அரூர் கோட்டத்தில் உள்ளடங்கும் வட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் குறு வட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது தருமபுரி கோட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள், அரூர் கோட்டாட்சியரால் **2008–**ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் **13–**ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

அட்டவணை

| கோட்டம் | வட்டம் |
|---|---|
| அரூர் | அரூர்<br>பாப்பிரெட்டிப்பட்டி |

அம்புஜ் சர்மா
அரசுச் செயலாளர்

**/உண்மைநகல்/**

பிரிவு அலுவலர்

**Annexure-2**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| Name of the post | Norms for a Revenue division | Staff strength existing in Dharmapuri Revenue Division | Posts to be retained in Dharmapuri Revenue Division | Posts to be redeployed to Harur Revenue Division | Posts to be newly created for Harur Revenue Division | Total posts for Harur Revenue Division |
| RDO | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| PA to RDO (Tahsildar) | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| Assistant | 3 | 5 | 3 | 2 | 1 | 3 |
| Junior Assistant | 2 | 2 | 2 | 0 | 2 | 2 |
| Stenographer | 0 | 1 | 1 | 0 | 0 | 0 |
| Typist | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| Record Clerk | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| Driver | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| Office Assistant | 2 | 3 | 2 | 1 | 1 | 2 |
| Watchman | 1 | 1 | 1 | 0 | 0 | 0 |
| Masalchi | 0 | 1 | 0 | 1 | 0 | 1 |
| Total | 13 | 18 | 14 | 4 | 9 | 13 |

**AMBUJ SHARMA**
**SECRETARY TO GOVERNMENT**

**/True Copy/**

**Section Officer**